# மட்/ககு/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் - 06 | கணிதம் | நேரம்: 2 மணித்தியாலயம் |
|---|---|---|
| பெயர்/சுட்டெண் : | | புள்ளிகள் : |

பகுதி - I

1. பின்வரும் பொருட்களில் வட்ட வடிவப் பொருட்களைத் தெரிவு செய்து எழுதுக.


   தாயக்கட்டை, வளையல், பென்சில், ஐந்து ரூபாய் நாணயம், வண்டிச் சில்லு, கதிரை, புத்தகம், போத்தல் மூடி

   ..........................................................................................................................................

   ..........................................................................................................................................

2. 3Kg 200g ஐ கிராமில் தருக? ..................................................................................

3. உருவிலுள்ள தரவுகளுக்கு அமைய பின்வரும் முக்கோணியின் சுற்றளவைக் காண்க?





4. இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி என்பதனை நியம முறையில் எழுதுக?

   ..........................................................................................................................................

5. பின்வரும் எண்கோலத்தை அவதானித்து அடுத்துவரும் இரு உறுப்புக்களை எழுதுக?

   1, 5, 9, 13, ....................................................................

6. 

   உருவினை அவதானித்து x, y ஆகிய கோணங்களைப் பெயரிடுக?

7. 952741 என்னும் இலக்கத்தில் 7இனால் குறிப்பிடப்படும் எண்ணின் இடப்பெறுமானம் யாது?. ..........................................................................................................................

8. ஒழுங்கான நான்முகி ஒன்றின் விளிம்புகள், உச்சிகள் என்பவற்றின் எண்ணிக்கையைக் காண்க?


   ..........................................................................................................................................



kalvi.lk

9. m = 5 ஆகவுள்ள போது பின்வரும் கோவைகளின் பெறுமானங்களைக் காண்க.

(i) m + 9 (ii) m - 2

10. 

நிழற்றிய உருவின் பின்னத்தை எழுதுக?

……………………………………….

11. "<, > " எனும் குறியீடுகளைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

(i) 6…… - 5 (ii) -7 ……. -8

12. 15 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக.

…………………………………………………………………

13. 1.63 எனும் எண்ணை வாசிக்கும் முறையைச் சொற்களில் எழுதுக. அதனை எண்சட்டத்தில் குறிக்க.

…………………………………………………………………

14. 2x3 = 6 எனின் 20x30 இன் பெறுமானம் யாது?


…………………………………………………………………..

15. தரம் 5 மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா மு.ப. 9.30 இற்கு ஆரம்பமாகி பி.ப 1.00 இற்கு முடிவடைந்தது. இந் நிகழ்ச்சி நடைபெற எடுத்த காலத்தைக் காண்க?

……………………………………………………………………

16. பையொன்றினுள் உள்ள இனிப்புக்களில் மட்டந்தட்டிய எண்ணிக்கை 50 என சுந்தரம் கூறினான் எனின் அப்பையினுள் இருக்கக்கூடிய இனிப்புக்களின் கூடிய, குறைந்த எண்ணிக்கையைக் காண்க?

……………………………………………………………………

17. 

ஒரு கட்டத்தின் பரப்பளவு $1cm^2$ எனின் முழு உருவத்தினதும் பரப்பளவு யாது?

……………………………………………..



kalvi.lk

18. இரண்டு லீற்றர் குளிர்பானத்தை 10 பேருக்கு பகிர்ந்தளிக்கும் போது, ஒருவருக்குக் கிடைக்கும் குளிர்பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றர் ஆகும்?

…………………………………………………………………………………

19.
1 2 3 4 5 6 7
8 9 10 11 12
13 14 15

இங்கு தரப்பட்டுள்ள எண்களை ஒற்றையெண், இரட்டையெண் என இரு கூட்டங்களாக்கி அவற்றுக்கான பெயர்களையும் இடுக?

……………………………………………………………………………………..
……………………………………………………………………………………..

20. இடைவெளி நிரப்புக.

(i) 5 : 3 = ☐ : 6 (ii) 2 : ☐ = 6 : 21

## பகுதி - II

**1ம் வினாவிற்கும் ஏனைய 4 வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. திணிவை அளப்பதற்காகத் தற்போது பல்வேறு வகையான தராசுகள் பயன்படுத்தப் படுகின்றது.

(a) i. திணிவை அளப்பதற்கு பயன்படும் அலகுகள் எவை?

ii. பின்வரும் பொருட்களின் திணிவை அளக்கப்பயன்படும் பொருத்தமான அலகுகளை எழுதுங்கள்.

சீனி - ……………………………

மருந்துப் பொருள் - ………………………….

iii. தற்போது திணிவை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் நவீன உபகரணத்தின் பெயர் யாது?

(b) நீர் நிரப்பும் போட்டிகளில் ஐந்து மாணவர்கள் நிரப்பிய நீரின் அளவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பெயர் | அளவு | |
|---|---|---|
| | l | ml |
| மதன் | 2 | 060 |
| ஆனந்தன் | 1 | 700 |
| ராஜா | - | 950 |
| குமார் | 3 | 100 |
| ரவி | 2 | 650 |



kalvi.lk

i. இவர்களில் அதிகூடியளவு நீரை நிரப்பியவர் யார்?

ii. ஆனந்தனும் ரவியும் நிரப்பிய நீரின் அளவு யாது?

iii. மதனை விட குமார் எவ்வளவு நீர் கூடியளவு நிரப்பியுள்ளார்?

iv. மதன் நிரப்பிய நீரின் அளவை மில்லி லீற்றரில் தருக?

(c) மூன்று மாணவர்கள் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வருகை தரும் தூரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | தூரம் |
|---|---|
| ரமேஷ் | 6Km |
| சியான் | 750m |
| ஆதி | 15Km |

i. ஆதி என்பவர் பயணித்த தூரம் எத்தனை மீற்றர் ஆகும்?

ii. மூவரும் பயணித்த தூரத்தை கிலோமீற்றரில் தருக?

02. (a) 1. கூட்டுக :

(i) 975
+ 468
................
...............

(ii) 47.25
+ 68.09
.................
.................

(iii) பெருக்குக. 275
X3
....................

(b) பெட்டி ஒன்றிலே 50 பேனாக்கள் இருந்தன. இதனை 25 மாணவர்களுக்கிடையே சமமாகப் பங்கிடும் போது, ஒருவருக்கு எத்தனை பேனாக்கள் கிடைக்கும்.


.................................

(c) வியாபாரி ஒருவரின் ஆண்டு வருமானம் ரூபாய் 16905400 ஆகும்.

(i) இத்தொகையை நியம வடிவில் எழுதுக.

(ii) அதனை சொற்களில் எழுதுக.


03. (a). கீழே உள்ள எண்கோட்டில் A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள எண்களை எழுதுக.




(b) சங்கரன் என்பவர் தனது வீட்டிலிருந்து பயணத்தை ஆரம்பித்து பாடசாலை சென்று பின் அங்கிருந்து பாடசாலை சென்று பின் அங்கிருந்து தபாலகத்திற்குச் சென்று கடிதம் ஒன்றை அனுப்பி விட்டு கடைக்குச் சென்றார். கடையிலிருந்து மீண்டும் தனது வீட்டிற்குச் சென்றார் இதனை இதனை பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது.



kalvi.lk




இதனைப் பயன்படுத்தி பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

(i) வீட்டிலிருந்து தெற்குத் திசையில் ……………………… அமைந்துள்ளது.

(ii) கடையிலிருந்து தெற்குத் திசையில் ………………………… அமைந்துள்ளது.

(iii) பாடசாலையிலிருந்து ………………………………... திசையில் கடை அமைந்துள்ளது.

(iv) பாடசாலைக்கு தென்கிழக்குத் திசையில் ………………………… அமைந்துள்ளது.

(v) வீட்டிலிருந்து ……………………….. திசையில் கடை அமைந்துள்ளது.

04. a) மாணவன் ஒருவன் 32 ஐ இரண்டின் வலுவாக பின்வருமாறு எழுதினான்.

$2^5$

(i) அவ்வலுவில் அடி, சுட்டி என்பவற்றை எழுதுக?

(ii) அவ்வலுவை சொற்களில் எழுதுக?

(iii) 81 ஐ மூன்றின் வலுவாக எழுதுக?


(iv) $2^3 \times 5^2$ பெறுமானத்தைக் காண்க?

Education கல்வி අධ්‍යාපන

(b) சீமெந்துக் கலவையொன்றில் சீமெந்துக்கும் மணலுக்கும் இடையிலான விகிதம் 4:12 ஆகும். சீமெந்துக்கும் மணலுக்கும் இடையிலான எளிய விகிதம் யாது?

(c) ஒரு மோட்டார் வாகனம் குறிப்பிட்ட வேகத்தில் மூன்று மணித்தியாலயத்தில் 90Km தூரம் செல்லுமாயின், அதே வேகத்தில் அவ் வாகனம் 6 மணித்தியாலயங்களில் செல்லும் தூரம் யாது?

05. (a)



(i) நிழற்றிய உருவின் பின்னத்தை எழுதுக?

(ii) அதற்கு இரண்டு சமவலுப்பின்னங்களை எழுதுக?

(iii) $\frac{3}{8}$ , $\frac{3}{5}$ , $\frac{3}{4}$ , $\frac{3}{11}$ ஆகிய பின்னங்களை இறங்கு வரிசையில் எழுதுக.

(iv) $\frac{7}{10}$ என்னும் பின்னத்தை தசமமாக மாற்றி எழுதுக?




kalvi.lk

(v) கழிக்க. $\frac{4}{5} - \frac{1}{10}$

(b) ஒருவர் தனது மாத வருமானத்தில் $\frac{1}{3}$ பங்கை உணவுக்கும் $\frac{1}{4}$ பங்கை போக்குவரத்திற்கம் செலவு செய்தார். அவர் உணவுக்கும் போக்குவரத்துக்கும் செலவு செய்தது என்ன பின்னமாகும்?

06. (a)



குறிப்பிட்ட எண்கோலமொன்னின் முதல் மூன்று உறுப்புக்கள் உருவில் காட்டப்பட்டுள்ளது.

(i) தரப்பட்டுள்ள எண்கோலத்தில் அமைந்த எண் தொடரின் சிறப்புப் பெயரை எழுதுக?


(ii) அவர் எண்கோலத்தில் அடுத்துவரும் நான்கு எண் கோலங்களை எழுதுக.

(iii) இவ் எண்கோலத்தின் மூன்றாம், நான்காம் உறுப்புக்களைக் கூட்ட பெறப்படுவது எத்தனையாவது சதுர எண் எனக் காண்க?

(b) 30 மாணவர்களிடையே அவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருந்த கொப்பிகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் பின்வருமாறு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 9 | 5 | 8 | 9 | 7 | 9 | 6 | 9 |
| 8 | 9 | 7 | 6 | 7 | 9 | 9 | 7 | 8 | 9 |
| 7 | 8 | 7 | 9 | 9 | 8 | 9 | 9 | 7 | 6 |

(i) கொப்பிகளின் எண்ணிக்கை, வரவுக்குறி, மாணவர்களின் எண்ணிக்கை கொண்ட அட்டவணை ஒன்று தயாரிக்க.

(ii)  இன் மூலம் 2 கொப்பிகள் குறிக்கப்படின் மேற்படி தரவுகளை பட வரைபில் காட்டுக.



kalvi.lk

# GRADE 6,7,8

STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page